**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி**

முன்னிலை திரு.R. பூமிநாதன், B.Sc.,B.L.,

நீதித்துறை நடுவர், நான்குநேரி

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை

**பட்டிகை வழக்கு எண். 560/2019**

**CNR NO: TNTL20-001336-2019**

தமிழக அரசு

மூலகரைப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.161/2019

காவல் உதவி ஆய்வாளர் மூலம் ... குற்றமுறையிடுனர்

/எதிர்/

மகேஷ், வயது 19/19,
த/பெ.பிரம்மு,
அம்மன் கோவில்தெரு,
செண்பகராமநல்லூர்,
நான்குநேரி தாலுாகா. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்

இவ்வழக்கானது கடந்த 11.11.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை - 1 திரு.பரணீந்தர் அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சுப்பையா , அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்களைப் பரிசீலனை செய்த பின்னர் இன்றுவரை நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்.

**தீர்ப்பு**

1. மூலகரைப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii)-இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

இவ்வழக்கின் கடந்த 21.08.2019 ம் தேதி மாலை சுமார் 7.00 மணியளவில் சாட்சி-1ன் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி பைக்கில் வேகமாக செல்ல சாட்சி-1 எதிரியைப் பார்த்து ஏன் இவ்வளவு வேகமாக செல்லுகிறாய், மெதுவாக செல்ல

வேண்டியது தானே என்று தட்டிக் கேட்டதாகவும், எதிரி ஏற்கனவே அடிக்கடி பைக்கில் வேகமாக சென்றதை சாட்சி-1 எச்சரிக்கை செய்துள்ளதாகவும், சம்பவம் நடந்த அன்றும் எதிரியை தட்டிக்கேட்க எதிரி சாட்சி-1 ஐ பார்த்து பொதுயிடத்தில் வைத்து அப்படிதாண்டா வேகமாக போவேன் தேவடியா மகனே, நீ யார்ல என்னை கேட்பதற்கு என்று அவமானமாக பேசி திடீரென சாட்சி-1 ன் கன்னத்தில் அறைந்து சாட்சி-1 ஐ கீழே தள்ளிவிட்டு அருகில் கிடந்த கல்லை எடுத்து புண்டமவனே ஒரே அடியா உன் மண்டையில அடித்து கொன்றுவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii)- இன் கீழ் அரசுத் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளியில்லை என்று குற்றச்சாட்டுகளை மறுத்துக் கூறினார்.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப் பட்டுள்ளனர். அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

## 5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்

(i) அ.சா.3 ஆதிமூலம் தனது சாட்சியத்தில் கடந்த 21.08.2019 ம் தேதி 20.00 மணிக்கு முதல்நிலை காவலர் நம்பிராஜன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது பாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 புகார்மனுவினை பெற்று அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் துரை அவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று அ.சா.ஆ 4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தும், சாட்சிகள் பாலகிருஷ்ணன், மகாலெட்சுமி, கல்யாணி, சண்முகம், நம்பிராஜன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தும், வழக்கின்

விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். பட்டியல் சாட்சி 8 நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தினால் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆதிமூலம் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

(ii) புகார்தாரரான அ.சா.1 பாலகிருஷ்ணன் புகார்மனுவில் உள்ள அ.சா.ஆ.1-ன் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அரசு தரப்பை ஆதரிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார்கள். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 7 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள்.

6. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றஞ்சாட்டபட்டவருக்கு பாதகமான அம்சங்கள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது குற்றஞ்சாட்டபட்டவர் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறியதால் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

7. இவ்வாறான சூழ்நிலையில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii)-ன் கீழான அரசு தரப்பால் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

8. அரசு தரப்பில் எதிரி, அ.சா.1 ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியும், அ.சா.1 ன் கன்னத்தில் அறைந்தும், கொலைமிரட்டல் விடுத்ததை அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்து விட்டது. எனவே எதிரிக்கு இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii)-ன் கீழான தண்டனை வழங்க எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

9. எதிரி தரப்பில், எதிரிக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. கண்ணுற்ற சாட்சி பிறழ்சாட்சியமாகிவுள்ளார், அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரி

மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii)-ன் கீழான குற்றவாளி அல்ல என்று எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுமாறு கோரி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

**10.** இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை குறித்து பரிசீலனை செய்கையில், கடந்த 21.08.2019 ம் தேதி மாலை சுமார் 7.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி பைக்கில் வேகமாக சென்றதை அ.சா.1, எதிரியைப் பார்த்து ஏன் இவ்வளவு வேகமாக செல்லுகிறாய், மெதுவாக செல்ல வேண்டியது தானே என்று தட்டிக் கேட்டதாகவும், எதிரி ஏற்கனவே அடிக்கடி பைக்கில் வேகமாக சென்றதை அ.சா.1 எச்சரிக்கை செய்துள்ளதாகவும், சம்பவம் நடந்த அன்றும் எதிரியை தட்டிக்கேட்க எதிரி அ.சா.1 ஐ பார்த்து பொதுயிடத்தில் வைத்து அப்படிதாண்டா வேகமாக போவேன் என்று அவமானமாக பேசியும், அ.சா.1 ன் கன்னத்தில் அறைந்தும், அ.சா.1 ஐ கீழே தள்ளிவிட்டு அருகில் கிடந்த கல்லை எடுத்து கொலைமிரட்டல் விடுத்ததை அ.சா.ஆ.2 புகார்மனுவின் மூலம் அறியமுடிகிறது. ஆனால் புகார்தாரரான அ.சா.1 நீதிமன்ற விசாரணையில் புகார்மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன் என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. அடுத்தபடியாக, வழக்கு சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 முதல் விசாரணையில் எதிரியைத் தெரியும், தன்னுடைய ஊர்க்காரர் என்றும், எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன் என்றும், வழக்கு பற்றி எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்று அரசு தரப்பை ஆதரிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளதாலும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான காளியம்மாள் மற்றும் கேள்விநிலை சாட்சியான சண்முகம் ஆகியோர்களை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யாமல் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது அரசு தரப்பு வழக்கை பாதிக்கக்கூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** அடுத்தபடியாக, பார்வை மகஜர் சாட்சிகளான அருணாச்சலம் மற்றும் மஞ்சுராஜா ஆகியோர்களை அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யாமல் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளதை பார்க்கும்பொழுது அ.சா.ஆ.4 பார்வை மகசர் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் புலன் விசாரணை அதிகாரியால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதுதான் என்பதை அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.** மேலும், கடந்த 27.02.2026 ஆம் தேதி புகார்தாரரும், எதிரியும், ஊர் பெரியோர்களின் அறிவுரையின் அடிப்படையில் தரப்பினர்களுக்குள் சமாதானமாகிவிட்டதாக தெரிவித்து இருதரப்பினரும் கையொப்பமிட்டு சமாதான மனு ஒன்றினை குவிமுச பிரிவு 320(2)ன் கீழ் தாக்கல் செய்துள்ளனர். எதிரி மீது இதச பிரிவுகள் 294(b)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சமாதானமாக முடிக்கக் கூடிய குற்றச்சாட்டுக்கள் அல்ல என்பதால் இந்நீதிமன்றம் அந்த மனுவை அன்றைய தினமே தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இந்த நிகழ்வானது தரப்பினர்களுக்கிடையே சமாதானமாகிவிட்டதை உறுதிபடுத்துகிறது.

**14.** இறுதியாக, அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரி மீது இதச பிரிவு 294(b), 352, 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டதால் குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**15.** இவ்வழக்கில் எதிரி பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப்பத்திரத்தை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரி நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிகளில் கு.வி.மு.ச.437A–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் என இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

**16.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு சொத்து குறித்து எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமையாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.07 16:04:54 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**அரசுத் தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பாலகிருஷ்ணன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.மகாலெட்சுமி (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. ஆதிமூலம் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 21.08.2019 தேதியிட்ட புகார்மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 21.08.2019 தேதியிட்ட புகார்மனு |
| அ.சா.ஆ.3 | 21.08.2019 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 21.08.2019 தேதியிட்ட பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 21.08.2019 தேதியிட்ட மாதிரி வரைபடம் |

**அரசுத் தரப்பு சான்று பொருள்** :

இல்லை

**குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :

இல்லை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.07 16:05:14 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**Particulars under rule 106 of Criminal Rules of Prcatice-2019**
**Judicial Magistrate Court, Nanguneri**
**CC No.560/2019**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Police Station and the Crime Number of the Offence | Moolakaraipatty, P.S., Cr.No.161/2019 |
| 2. | Name, Age, Father Name | Magesh, S/o Pramu |
| 3. | Occupation | Cooli |
| 4. | Residence | Shenbagaramanallur |
| 5. | Occurrence | 21.08.2019 |
| 6. | Complaint | 21.08.2019 |
| 7. | Apprehension | 22.08.2019 |
| 8. | Release on Bail | 27.08.2019 |
| 9. | Commitment | - |
| 10. | Commencement of Trial | 27.02.2026 |
| 11. | Closure of Trial | 27.02.2026 |
| 12. | Sentence or Order | 07.03.2026 |
| 13. | Service of copy of Judgment of finding on accused | - |
| 14. | Explanation of delay | - |

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.03.07 16:05:21 +0530

Judicial Magistrate,
Nanguneri.